# செந்தூலில் 850 மலிவு விலை வீடுகள்

## கூட்டரசுப் பிரதேச அமைச்சர் தொடங்கி வைத்தார்



எல்.கே.ராஜ்

கோலாலம்பூர், மே 4-

கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டிபிகேஎல்), செந்தூல் ராயா சென்டிரியான் பெர்ஹாட் (எஸ்ஆர்எஸ்பி) நிறுவனத்துடன் இணைந்து 2 மைல்கல் திட்டங்களை நேற்று அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தது.

இந்த 2 திட்டங்களும் செந்தூல் பகுதியில் வாழும் பி40 பிரிவைச் சேர்ந்த மக்களின் நல்வாழ்வை இலக்காகக் கொண்டவை என்று பிரதமர் இலாகா கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஸலிஹா முஸ்தாபா கூறினார்.

ஒய்டிஎல் மேம்பாட்டு நிறுவனத்தின் துணை நிறுவனமான எஸ்ஆர்எஸ்பி சமுதாய மேம்பாட்டில் அதீத கடப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்பதை இந்த 2 திட்டங்களும் பிரதிபலிக்கின்றன. ஒன்று 850 மலிவு விலை வீடுகளை நிர்மாணிப்பது, மற்றொன்று பிந்தாங் செமர்லாங் 2.0 கல்வித்திட்டமாகும்.

இந்தக் கல்வித்திட்டத்தில் செந்தூலில் உள்ள 23 ஆரம்பப் பள்ளிகளைச் சேர்ந்த 107,500 மாணவர்கள் பயன்பெறுவர் என்ற அவர், வீடுகளை நிர்மாணிப்பது, ஒரு திட்டத்தைத் தொடங்கி வைப்பது என்பது ஒரு பெரிய விஷயமல்ல. ஆனால் கௌரவத்தை நிலைநிறுத்துவது வாய்ப்புகளை உருவாக்குவது, நம்பிக்கையை விதைப்பது ஆகியவை மிக மிக அவசியம், அத்தியாவசியம் என்று டாக்டர் ஸலிஹா குறிப்பிட்டார்.

இன்றைய தினம் ஒரு சக்திமிக்க முன்னுதாரணத்தை நாம் பிரதிபலித்திருக்கிறோம். அரசாங்கமும் தனியார் துறையும் ஒன்றிணைந்து மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு இந்த மனித நேயத் திட்டங்களை முன்னெடுத்திருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

தரமான வீடுகள், குறிப்பாக குறைந்த வருமானப் பிரிவைச் சேர்ந்த குடும்பங்கள் அதனைப் பெற்றிருப்பது தேசிய இலக்கின் ஒரு முக்கிய அம்சமாகும். நிலைத்தன்மைமிக்க, வலிமைமிக்க சமுதாயத்திற்கான அடித்தளத்தை இவை அமைக்கின்றன. இதுதான் மலேசிய மடானியின் உண்மையான உணர்வு. மக்களுக்கு முன்னுரிமை தருவதில் கவனம் செலுத்தப்படுகிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.

செந்தூலில் நேற்று தலா 42,000 ரிங்கிட் மதிப்பிலான 850 ரெசிடென்ஸி மலிவு விலை வீடமைப்புத் திட்டத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார். இந்த 42,000 ரிங்கிட் என்பது அசல் நிர்மாணிப்பு விலைகளைக் காட்டிலும் மிகக் குறைவு. இதனை எஸ்ஆர்எஸ்பி நிறுவனம் அந்த வேறுபாட்டுத் தொகையை முழுமையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது.

குறைந்த வருமானப் பிரிவைச் சேர்ந்த குடும்பங்கள் பாதுகாப்பான , தரமான வீடுகளை பெறுவதை உறுதி செய்வதோடு செந்தூல் பகுதிக்கு புத்துயிர் அளிப்பதாகவும் இருக்கிறது என்று கூறிய அவர், அரசாங்கத்தின் தேசிய வீடமைப்புக் கொள்கை செந்தூலில் வசதி குறைந்த குடும்பங்களுக்கு வாங்கும் சக்தியில் வீடுகளை வழங்குவதை உறுதி செய்கிறது என்றார்.

அதேசமயத்தில் பிந்தாங் செமர்லாங் 2.0 கல்வித்திட்டமானது செந்தூல் வாழ் மக்களின் பிள்ளைகளுக்கு கல்வியில் மிகப்பெரிய ஓர் உந்துசக்தியாகத் திகழ்கிறது. தன்னுடைய திட்டத்தில் வீடு வாங்குவோரின் பிள்ளைகள் பள்ளிகளுக்குச் செல்வதை எஸ்ஆர்எஸ்பி நிறுவனம் வாய்ப்புகளை உருவாக்கித்தருகிறது.

செந்தூலில் உள்ள 23 ஆரம்பப்பள்ளிகள் இந்தத் திட்டத்தில் பயன்பெறும். தனியார் துறையினரின் பங்களிப்பு பெருமைமிக்கதாக இருக்கிறது. ஆரோக்கியமான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் அவர்களின் பங்களிப்பு அபரிமிதமாக இருக்கிறது என்று டாக்டர் ஸலிஹா குறிப்பிட்டார்.